வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு


Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 02.05.2026 சனிக்கிழமை | இதழ் : 116 | பக்கங்கள் : 08

# சதிகார குழுக்களுக்கு அரசு அடிபணியப் போவதில்லை!

## மே தின உரையில் ஜனாதிபதி அநுரகுமார



கொழும்பு, மே. 02

**தற்போதைய அரசாங்கமானது உழைக்கும் மக்களின் நம்பிக்கையை வென்ற ஒரு மக்கள் அரசாங்கம் எனவும், ஒரு சில சிறிய குழுக்களின் கோரிக்கைகளுக்காக அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப முடியாது எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். சதிகாரக் குழுக்களுக்கு அரசு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.**

மக்கள் ஆட்சிக்கு - மக்கள் பலம் என்னும் தொனிப்பொருளில் நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மேதின கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் ஏற்பட்ட சூறாவளித் தாக்கத்தினால்

07



## படை அதிகாரிகள் பங்களா முன்பாக மயிலிட்டி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மே. 02

வலிகாமம் வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி, காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் அதிகாரிகள் பங்களா முன்பாக நேற்று போராட்டம் முன்னெடுத்தனர்.

வலிகாமம் வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த

07

### பூர்வீக காணிகளை விடுவிக்கக் கோரி

## கேப்பாபிலவு மக்கள் நேற்று படைமுகாம் முன் போராட்டம்!

முல்லைத்தீவு, மே 02

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் உள்ள தங்களின் பூர்வீக காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்கள், இராணுவ படைத் தலைமையகத்தின் பிரதான வாயிலுக்கு முன்பாக நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடல், கரை மற்றும் விவசாய நிலங்களை வாழ்வாதாரமாக நம்பியிருந்த கேப்பாபிலவு மக்கள், பாதுகாப்புப் படையின் நடவடிக்கைகளால் தங்களது வாழ்வாதாரம் கடுமையாக

07

## பாரிய ஊழல்களில் ஈடுபட்டுள்ளது அரசு!



### ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 02

தற்போதைய அரசாங்கம் பொய்கள் போதாதென்று திருட்டுகளிலும் ஈடுபட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் நேற்று மாளிகாவத்தை பி.டி. சிறிசேன விளையாட்டரங்கில் நடத்திய மே தினக் கூட்டத்திற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துச் செய்தியிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

07

## செம்மணி மனித புதைகுழியில் 3 மனித எச்சங்கள் அடையாளம்!

யாழ்ப்பாணம், மே. 02

அரியாலை செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனிதப் புதைகுழி அகழ்வின் மூன்றாம் கட்டத்தின் ஐந்தாம் நாளான நேற்று, புதிதாக மூன்று மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நீதவான் செல்வநாயகம் லெனின் குமார் முன்னிலையில், அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைய, இதுவரை 244 மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டு, 240 எச்சங்கள் மனித எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ)

## மாகாண சபைத் தேர்தலை முடிந்தால் நடத்தி காட்டுக!

### அரசுக்கு சஜித் பிரேமதாஸ சவால்



கொழும்பு, மே. 02

முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு சவால் விடுக்கின்றேன் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று

07

### மாணவர் உணவு வழங்கலில் முறைப்பாடுகள்

## விசேட விசாரணைக் குழு வடக்கில் 34 பாடசாலைகளுக்கு திடீர் விஜயம்

யாழ்ப்பாணம், மே..02

பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாகக் கிடைத்துவந்த முறைப்பாடுகளையடுத்து, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் விசேட விசாரணைக் குழுவினர் நேற்று முன் தினம் வியாழக்கிழமை வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள 34 பாடசாலைகளில் ஒரே நேரத்தில் அதிரடி திடீர்கள ஆய்வுகளை மேற்கொண்டனர்.

வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கவும், பொதுமக்கள் முன்வைக்கும்

07

## மரத்திலிருந்து தவறி விழுந்தவர் மரணம்!

யாழ்ப்பாணம், மே. 02

யாழ்ப்பாணத்தில் கறிவேப்பிலை பறிப்பதற்காக மர த்தில் ஏறியவர் தவறி கீழே விழுந்து உயிரிழந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது காங்கேசன் துறை வீதி, நாச்சிமார் கோவிலடியை சேர்ந்த

07

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு மே தினக் கூட்டம் நேற்று இணுவிலில்!



யாழ்ப்பாணம், மே. 02

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை

07

## வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சியின் மே தினம்!

யாழ்ப்பாணம், மே. 02

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இரண்டு பிரதான பேரணிகளை நடத்தியது.

வடக்கு மாகாணம் மேதினக்கூட்டம் முல்லைத்தீவு, மாங்குளம் பகுதியில் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் தலைமையில் இந்தப் பேரணி இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்திற்காக மேதினக்கூட்டம் மட்டக்களப்பு, பட்டிப்பளைப் பகுதியில் பாராளுமன்ற உறுப் பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

07

## தமிழ்த் தேசியப் பேரவையின் மே தினம் யாழ்ப்பாணத்தில்!



யாழ்ப்பாணம், மே. 02

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த்

07

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி வெளிவாரிப் பணியாளர் நியமன தடைக்கு தீர்வு வழங்கப்படும்!

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

யாழ்ப்பாணம், மே. 02

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள வெளிவாரிப் பணியாளர்களின் நியமனங்களில் காணப்படும் இழுபறிகள் தொடர்பில் சிறந்ததொரு தீர்வை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக, அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸிடம் உறுதியளித்தார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கு அமைச்சர் இ.சந்திரசேகரன் நேரில் சென்று தொழிலாளர்களின் நியமனப் பிரச்னை மற்றும் நடைமுறையில் உள்ள தடைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இச் சந்திப்பில் தவிசாளர், அரசாங்கங்கள் 180 நாள்களை நிறைவு செய்தவர்களுக்கு பொருத்தமான முறையில் வடக்கில் உள்ள ஒரேயொரு அமைச்சர் என்ற வகையில் தாங்கள் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும். அமைச்சரவை முடிவுகளில் தாங்கள் இவ்விடயத்தில் தாக்கம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இச் சந்திப்பில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் இராமலிங்கம் பகிரதனும் சபை சார்ந்து மத்திய அரசினால் தீர்க்கப்படவேண்டிய பிரச்னைகளை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

பாதிக்கப்படும் தொழிலாளர்களும் தமது நியமனக் கோரிக்கையினை முன்வைத்தனர். இந் நிலையில் தொழிலாளர்களின் ஆவணங்கள், சேவைக்கால ஆவணங்கள், சபையில் காணப்படும் வெளிவாரி தொழிலாளர் தொடர்பான நிர்வாக முறையான ஆவணங்களையும் அறிக்கைகளையும் பார்வையிட்டு விவரங்களை ஆராய்ந்த அமைச்சர் தொலைபேசியில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சருடன் பேசியதுடன், அரசாங்கம் இவ்விடயத்தில் உத்தியோகபூர்வ அறிக்கைளை விரைவாகப் பெற்று பொருத்தமான தீர்வொன்றை விரைவில் முன்வைப்பதாக உறுதியளித்தார்.

யாழ் மாவட்டத்தில் 400 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் வெளிவாரியாக உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (அ)

# அவுஸ்திரேலியாவில் வசித்துவரும் இலங்கையர் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, மே. 02

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையில் பிறந்தவர்களின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளில் கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அவுஸ்திரேலிய புள்ளிவிவரப் பணியகம் வெளியிட்டுள்ள புதிய தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதி நிலவரப்படி இந்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 800 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு இலட்சத்து 72 ஆயிரத்து 800 ஆகக் காணப்பட்ட இந்த எண்ணிக்கை, ஒரே ஆண்டில் சுமார் 12 ஆயிரத்தால் உயர்ந்துள்ளது.

இதன் மூலம் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் வெளிநாடுகளில் பிறந்தவர்களின் தரவரிசையில் இலங்கை முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 10 ஆயிரமாக இருந்த இலங்கையர்களின் எண்ணிக்கை, ஒரு தசாப்த காலப்பகுதிக்குள் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் வரை உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்தோரின் தரவரிசையில் இந்தியா முதலிடத்திலும், இங்கிலாந்து இரண்டாம் இடத்திலும் தொடர்ந்து நீடிக்கின்றன.

மலேசியா உள்ளிட்ட பல நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி, அவுஸ்திரேலியாவின் குடியேற்றப் பரப்பில் இலங்கையர்கள் ஒரு முக்கிய சமூகமாக உருவெடுத்துள்ளமையை இந்தப் புதிய புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்துகின்றன. (அ)

# சகல பிரதான தபாலகங்களிலும் விரல் அடையாள இயந்திரங்கள்

கொழும்பு, மே. 02

இலங்கை தபால் திணைக்களத்தில் நிலவி வரும் மேலதிக நேரக் கொடுப்பனவு முறைகேடுகளைத் தடுக்கும் நோக்கில், அனைத்து பிரதான தபால் நிலையங்களிலும் விரல் அடையாள இயந்திரங்கள் தற்போது வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளன.

உப தபால் நிலையங்களைத் தவிர ஏனைய அனைத்து நிலையங்களிலும் இந்தத் தானியங்கி வரவுப் பதிவு முறைமை முழுமையாகச் செயற்படுத்தப்பட்டுள்ளதாகத் தபால் மா அதிபர் ருவன் சத்குமார தெரிவித்துள்ளார்.

தபால் ஊழியர்கள் சிலர் சுமார் 10 மில்லியன் ரூபாவிற்கும் அதிகப்படியான மேலதிக நேரக் கொடுப்பனவுகளை முறைகேடாகப் பெற்றுள்ளதாகக் கடந்த 2025 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டையடுத்து, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு இது குறித்த விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

முறையான வரவுப் பதிவுகள் இன்றி, வாகனப் பராமரிப்பு போன்ற பணிகளுக்காகத் தேவையற்ற ஊழியர்களை உள்வாங்கி மிகைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் பெறப்பட்டதாகக் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

முன்னதாக, இந்த விரல் அடையாள இயந்திரங்களை அறிமுகப்படுத்துவதற்குத் தபால் ஊழியர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டபோதிலும், தற்போது இந்த முறைமை வெற்றிகரமாக நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன் மூலம் இனிவரும் காலங்களில் மேலதிக நேரக் கொடுப்பனவுகளில் நிலவும் ஊழல்களை முற்றாக ஒழிக்க முடியும் எனத் தபால் திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (அ)

# "மெரிட்" பல்கலை நுழைவு எண்ணிக்கையை உயர்த்துவதில் தீவிர கவனம் அவசியமானது

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே. 02

அனைத்துப் பரீட்சார்த்திகளிலிருந்தும் பல்கலைக்கழக நுழைவு வீதத்தில் வடக்கு மாகாணம் தேசிய ரீதியில் பெற்றுள்ள முதலிடத்தைத் தக்கவைப்பதற்கு அப்பால், அந்த அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்க வேண்டும் எனவும், குறிப்பாக "மெரிட்" அடிப்படையிலான பல்கலைக்கழக நுழைவு எண்ணிக்கையை உயர்த்துவதற்குத் தீவிர கவனம் செலுத்த வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், ஆளுநர் தலைமையில் நேற்று மாலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் கல்வி, விளையாட்டு, பண்பாட்டுத் திணைக்களங்களினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் முன்னேற்றங்கள் விரிவாக மீளாய்வு செய்யப்பட்டன. அத்துடன், மத்திய கல்வி அமைச்சின் ஊடாக வடக்கு மாகாணத்திலுள்ள தேசியப் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களின் தற்போதைய நிலவரங்களும் ஆராயப்பட்டன. இக்கலந்துரையாடலில் ஆளுநரால் முக்கிய விடயங் கள் சுட்டிக்காட்டப்பட்டுப் பணிப்புரைகளும் வழங்கப்பட்டன.

மாகாணம் முழுவதுமான ஆளணிப் பரம்பலைச் சீராக்கும் நோக்கில் புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் இடமாற்றக் கொள்கை தொடர்பில் ஆளுநர் விசேட கவனம் செலுத்தினார். இக்கொள்கை தொடர்பில் ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் விரைவில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, அடுத்த ஆண்டுக்கான ஆசிரியர் இடமாற்றங்களைப் புதிய கொள்கையின் ஊடாகவே நடைமுறைப்படுத்த துரித நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் ஓய்வூதியத்துக்கு விண்ணப்பிக்கும் வரை அவர்களது தனிப்பட்ட கோவைகளை இற்றைப்படுத்தாது நிலுவையில் வைத்திருக்கக் கூடாது எனவும், அவற்றை உரிய காலத்தில் இற்றைப்படுத்தி ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். அதேவேளை, நிலுவையில் உள்ள விசாரணைகள் காரணமாக எவருக்கும் ஓய்வூதியம் தாமதமாகும் நிலை ஏற்படக்கூடாது எனவும், விசாரணைகளைத் துரிதமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆளுநர் திட்டவட்டமாகப் பணிப்புரை விடுத்தார்.

நிர்வாகச் செயற்பாடுகளில் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் வகிபாகம் மிக முக்கியமானது எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், அவர்கள் தற்துணிவுடன் முடிவுகளை எடுத்து உரியவாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார். (அ)

# மரக்கறி பழங்களின் விரயத்தை குறைப்பதற்காக களஞ்சிய வசதி

கொழும்பு, மே. 02

இலங்கையில் அறுவடைக்குப் பின்னரான மரக்கறி மற்றும் பழங்களின் விரயத்தைக் குறைக்கும் நோக்கில், குளிர்சாதனக் களஞ்சிய வசதிகளை விரிவுபடுத்துவதற்கு வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது சுமார் 20 வீதமாகக் காணப்படும் விளைச்சல் விரயத்தை, 15 வீதத்திற்கும் குறைவாகக் குறைப்பதே இந்தத் திட்டத்தின் பிரதான இலக்காகும்.

தடைப்பட்டிருந்த தம்புள்ளை குளிரூட்டி நிலையக் கட்டுமானப் பணிகளை அரசாங்கத்தின் மத்தியஸ்தத்துடன் மீண்டும் ஆரம்பித்துள்ளதாகப் பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

5,000 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட இந்நிலையத்துடன் மேலதிகமாக கெப்பட்டிபொல மற்றும் தம்புத்தேகம ஆகிய பகுதிகளில் கொரிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேலும் மூன்று குளிரூட்டி நிலையங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

கையாளும் முறையற்ற விதம் மற்றும் முறையற்ற போக்குவரத்து காரணமாகவே அதிகளவான விளைச்சல் வீணாவதாகச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், இரசாயனங்கள் மூலம் பழங்க ளைப் பழுக்க வைப்பதனால் அவை விரைவில் அழுகிப்போவதாகவும் கவலை வெளியிட்டுள்ளார்.

# சடலமாக மீட்கப்பட்ட உதவிப் பணிப்பாளர் சி.ஐ.டியினரின் அழைப்பை புறக்கணித்தவர்!

கொழும்பு, மே. 03

சடலமாக மீட்க்கப்பட்ட நிதி அமைச்சின் உதவிப் பணிப்பாளர் மத்திய திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் அளிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விடுத்த இரண்டு அழைப்புகளையும் புறக்கணித்திருந்தவர் என தெரியவருகின்றது.

மத்திய திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டு, பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருந்த நிதி அமைச்சின் உதவிப் பணிப்பாளர் ஒருவர் நேற்று முன் தினம் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

குளியாப்பிட்டியவில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன் தினம் சடலமாக மீட்கப்பட்ட இவர், இது தொடர்பாக வாக்குமூலம் அளிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விடுத்த இரண்டு அழைப்புகளையும் புறக்கணித்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்பது குறித்துப் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
02.04.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# ஊழல் சொற்போர்

முக்கிமான அரசியல் கட்சிகளின் மேதினப் பேரணிகளில் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளையும் நலன்களையும் விடவும் ஊழல் விவகாரங்களே பிரதான பேசுபொருளாக விளங்கின. எதிரணிக் கட்சிகள் குறிப்பாக, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமயிலான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சி போன்றவற்றின் பேரணிகளில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீதான அண்மைக்கால ஊழல் குற்றச்சாட்டுக்களே முக்கியத்துவம் பெற்றன.

ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பேரணிகளில் முன்னைய ஆட்சியாளர்களின் ஊழல் விவகாரங்கள் பற்றியே பேச்சாளர்கள் நினைவுபடுத்தி கடந்த காலத்தில் அரசாங்க உயர் பதவிகளில் இருந்த பலரும் அவர்களின் குடும்பத்தவர்களும் விரைவில் சிறைக்குச் செல்ல வேண்டிய நிலை வரும் என்று எச்சரிக்கை செய்தனர்

முன்னைய அரசாங்கங்களின் தலைவர்களினால் வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பணம் குறித்து அந்தந்த நாடுகளின் உதவியுடன் அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுத்திருப்பதாக ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இரு தினங்களுக்கு கூறினார்.

நுவரேலியாவில் தேசிய மக்கள் சக்தியின் மேதினப் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க ஊழல் முறைகேடுகள் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரப்படுத்தியிருக்கிறது என்றும் விசாரணைகளை துரிதப்படுத்த அரச விசாரணை அமைப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன என்றும் கூறினார்.

முக்கியமான ஊழல் வழக்குகளின் விசாரணைகள் இவ்வருடம் முடிவுக்கு வரும் என்றும் அதில் அகப்படுபவர்கள் முன்னாள் ஜனாதிபதிகளாகவோ, அவர்களின் மனைவிமார், பிள்ளைகள் மற்றும் உறவினர்களாகவோ இருந்தால் அதை நாம் பொருட்படுத்தப் போவதில்லை என்றும் திசநாயக்க குறிப்பிட்டார்.

தவறான ஆட்சி முறைக்கு எதிரான "அறகலய" மக்கள் கிளர்ச்சியை தொடர்ந்து முன்னைய ஆட்சியாளர்களின் ஊழல் முறைகேடுகளுக்கும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு எதிராக தீவிரமான பிரசாரங்களை மேற்கொண்டு அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தியின் "தூய்மைப் பிம்பத்தை" சாத்தியமானளவுக்கு சேதப்படுத்துவதில் எதிரணி கட்சிகள் மும்முரமாக இருக்கின்றன.

அதற்கு வாய்ப்பான சூழ்நிலையை தரங்குறைந்த நிலக்கரி இறக்குமதி , இணைய ஊடுருவல் மூலமாக திறைசேரியின் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் திருட்டு, அமெரிக்க போஸ்டுக்கு (America Post) அனுப்பிய பணம் மாயமான சம்பவம் போன்ற விவகாரங்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றன.

பதவிக்கு வந்த குறுகிய ஒன்றரை வருட காலப்பகுதிக்குள் இத்தகைய ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாக வேண்டிவரும் வரும் என்று ஜனாதிபதி திசநாயக்கவும் ஏனைய அரசாங்கத் தலைவர்களும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். எதிரணி கட்சிகள் குற்றஞ்சாட்டும் ஊழல் விவகாரங்களில் அரசாங்கத் தலைவர்களுக்கு தொடர்பு இருக்கிறதோ இல்லையோ அதை விசாரணைகளே தீர்மானிக்கும். ஆனால், குற்றச்சாட்டுக்களை கையாளுவதில் அரசாங்கம் தடுமாறுகிறது என்பது உண்மை.

ஒருபுறத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்ற அதேவேளை, மறுபுறத்தில், குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்ற எதிரணி அரசியல்வாதிகளை அச்சுறுத்தும் வகையில் முன்னைய ஊழல் முறைகேடுகளை அரசாங்கத் தலைவர்கள் நினைவுபடுத்துவதை நோக்கும்போது தற்போது இலங்கை அரசியல் ஒரு "ஊழல் சொற்போரில்" சிக்கியிருக்கிறது என்றே தோன்றுகிறது.

ஆனால், முன்னைய அரசாங்கங்களில் முக்கிய பதவிகளில் இருந்த அரசியல்வாதிகளும் தற்போதைய அரசாங்க அரசியல்வாதிகளும் ஏட்டிக்குப் போட்டியாக ஊழலுக்கு எதிராக குரல் கொடுப்பது நான்கு வருடங்களுக்கு முன்னரான மக்கள் கிளர்ச்சி ஏற்படுத்திய அரசியல் உணர்வு மாற்றத்தின் விளைவான நேர்மறையான நிகழ்வுப் போக்காகும்.

முன்னரைப் போன்று அல்ல, தற்போது அரசியல்வாதிகள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும் பொது மக்களின் கண்களின் முன்னாலேயே இயங்க வேண்டியிருக்கிறது.

புதிய அரசியல் கலாசாரம், முறைமை மாற்றம் என்ற வாக்குறுதிகளுடன் அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதன் மீதான தற்போதைய ஊழல் குற்றச்சாட்டுக்களில் இருந்து தன்னை வெளிப்படைத் தன்மையுடன் நேர்மையான முறையில் விடுவித்துக்கொள்ளத் தவறினால் அது முன்னைய ஊழல்தனமான அரசியல்வாதிகளுக்கு வாய்ப்பான அரசியல் சூழ்நிலையைத் தோற்றுவிப்பதாகவே அமையும் என்பது ஈழநாட்டின் உறுதியான கருத்தாகும்.

# பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்க உறுதிபூண்டுள்ளோம்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

கொழும்பு, மே 02

உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான புதிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நியாயமான, பாதுகாப்பான பணிச் சூழலை உருவாக்க உறுதிபூண்டுள்ளோம் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பிரதமர் விடுத்துள்ள மே தின வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மே தினமானது, மக்கள் சக்தியால் உருவான அரசாங்கத்தின் கீழ் கொண்டாடப்படுவதனால் முக்கியத்துவம் மிக்கதாக அமைகின்றது.

உழைப்புக்கு உரிய உண்மையான கௌரவத்தைப் பெற்றுக்கொடுப்பதும், அனைத்து உழைக்கும் மக்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பும் எமது அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

இதற்கமைய, நடைமுறையிலுள்ள சேவைகளை விரிவுபடுத்தி, உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான புதிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நியாயமான, பாதுகாப்பான பணிச் சூழலை உருவாக்க வேண்டுமென நாம் உறுதிபூண்டுள்ளோம்.

அத்தோடு, அனைத்துப் பிரஜைகளுக்கும் நியாயமான, சமமான வாய்ப்புகளை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே அரசாங்கத்தின் அடிப்படை நோக்கமாகும். இதற்கமைய, விசேட தேவையுடையோர் உட்பட அனைவருக்கும் கண்ணியமான தொழில்சார் வாழ்க்கையை முன்னெடுக்கக்கூடிய சூழலை உருவாக்குவது எமது பொறுப்பாகும்.

ஊதியமற்ற உழைப்பை இனங்காணக்கூடிய மற்றும் அத்தகைய தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தக்கூடிய தேசிய சமூகப் பாதுகாப்புக் கட்டமைப்பை நிறுவுவது எமது அரசாங்கத்தின் முதன்மைக் கடமைகளுள் ஒன்றாகும்.

அனைத்து விதமான உழைப்பையும் மதிக்கின்ற, உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற, சமத்துவமிக்க ஒரு நாட்டை உருவாக்குவதற்காக ஒன்றுபட்டு முன்னேறுவதன் முக்கியத்துவத்தை இந்த மே தினத்தில் நாம் மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும்.

அனைத்து உழைக்கும் மக்களின் ஆற்றல் மற்றும் அர்ப்பணிப்பு மூலம், நம் அனைவரதும் பொதுவான இலக்கான "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்பதை மிக விரைவில் அடைவதற்குரிய வலிமை கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதாக பிரதமர் மேலும் தெரிவித்தார். (எ)

# பொருளாதார நெருக்கடி, தடை காரணமாக அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, மே 02

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் மருந்து விநியோக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள தடைகள் காரணமாக, பல அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

ரூபாயின் வீழ்ச்சி மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கம் காரணமாக வெளிநாட்டு மருந்து விநியோகஸ்தர்களால் முறையான விநியோகத்தை முன்னெடுக்க முடியாமல் போயுள்ளது.

அத்துடன், அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் மருந்துகளை இறக்குமதி செய்ய விநியோகஸ்தர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

சில மருந்து வகைகளை பதிவு செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதமும் இந்தத் தட்டுப்பாட்டுக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது. முக்கிய நோய்களுக்கான மருந்துகள் தட்டுப்பாடாக உள்ளதால், மருந்தகங்களில் மருந்துகளை பெற்றுக்கொள் வதில் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக புற்றுநோய், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், அறுவை சிகிச்சைக்காக காத்திருப்பவர்கள் மற்றும் தொற்றா நோய்களுக்கு சிகிச்சை பெறுபவர்கள் போன்ற நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சில நோயாளர்கள் அதிக செலவு செய்து வெளிநாடுகளில் இருந்து மருந்துகளை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது சாதாரண மக்களுக்கு பெரும் நிதிச் சுமையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரத்தில் அதிகாரிகள் உடனடியாக தலையிடாவிட்டால், சுகாதார சேவைகள் மற்றும் நோயாளர் பராமரிப்பு நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# மலையக மக்களின் உரிமைகளுக்காக இ.தொ.கா. தொடர்ந்தும் குரல் கொடுக்கும்

## செந்தில் தொண்டமான் தெரிவிப்பு

கொழும்பு, மே 02

மலையக மக்களின் உரிமைகளுக்காக இ.தொ. கா தொடர்ந்தும் குரல் கொடுக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமை காரியாலயமான சௌமியபவனில் நேற்று வெள்ளிக்கிழமை மே தின கொடியேற்றும் நிகழ்வு கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இந்த வருடத்துக்கான மே தின நிகழ்வு தோட்ட வாரியாக நடைபெறுகின்றது. கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் போது தோட்ட வாரியாக தான் மே தின நிகழ்வுகள் நடைபெற்றன.

சிறீமாவோ பண்டாரநாயக்க காலத்தில் நாடு பொருளாதார நெருக்கடியை சந்தித்த நேரத்திலும், யுத்தத்தின் உச்சக்கட்ட காலத்திலும், கொரோனா தொற்றுக் காலத்திலும், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் போதும் மக்களை அசௌகரியத்தில் தள்ளிவிடாது மக்களின் பொருளாதார சுமையை கருத்தில் கொண்டு இ.தொ.காவின் மே தின கூட்டம் தோட்ட வாரியாக நடைபெற்றது.

மேலும் இதுவரை காலமும் மலையக மக்களின் அனைத்து உரிமைகளையும் பெற்றுக் கொடுத்தது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பதை எவராலும் மறுக்க முடியாது. எதிர்காலத்திலும் மலையக மக்களின் உரிமைகளை பாதுகாப்பதிலும், எதிர்காலத்தில் உரிமைகளை வென்று எடுப்பதிலும் இ.தொ.கா. முன்னின்று செயல்படும்"- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மே - 02 சனிக்கிழமை
பராபவ வருடம் - சித்திரை 19
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.00
திதி : பிரதமை




**மேடம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்**
எதிர்பாராத பணவரவு கிடைக்கும். பிள்ளைகளால் உறவினர் நண்பர்கள் உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள். நினைத்த காரியம் நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**கடகம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். புது வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் வரவு உயரும். உத்தியோகத்தில் சில அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் புது முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.


**விருட்சிகம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிக்க வேண்டி வரும்.

**தனுசு**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் ஆதரவு கிட்டும். உற்சாகமான நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகள் தடைப்பட்டு முடியும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் நிறை குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.





மாதகல், நுணசை முருகமூர்த்தி ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நேற்று முன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

# யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதியில் உணவு வழங்குவோர் மீது பரிசோதனை

யாழ்ப்பாணம், மே 02

திருநெல்வேலி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட பல்கலைக்கழக மாணவர் விடுதிகளில் வெளி நபர்கள் நீண்டகாலமாக உணவு வழங்கி வருகின்றனர்.

இவர்கள் தொடர்பில் தொடர்ச்சியான பல முறைப்பாடுகள் திருநெல்வேலி பொதுச் சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனுக்கு கிடைக்கப்பெற்றன. இதனையடுத்து அவர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் இரவு விடுதிகளுக்கு உணவு வழங்குவோரிடம் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர். இனங்காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் எச்சரிக்கைகள் வழங்கப்பட்டதோடு, குறைபாடுகளை விரைந்து நிவர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.



இந்த விடயம் தொடர்பில் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், எதிர்காலத்தில் தொடர்ந்து குறைபாடுகள் இனங்காணப்படும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-03)

# யாழில் சீட்டு காசு கொடுக்காததால் குடும்பஸ்தர் மீது கொடூர தாக்குதல்!

யாழ்ப்பாணம், மே 02

யாழில் சீட்டு காசு கொடுக்காததால் குடும்பஸ்தர் மீது கொடூர தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

உடுவில் நாகம்மாள் கோவிலுக்கு அருகாமையில் வசிக்கும் பெண்ணொருவர் சீட்டு பிடிக்கும் தொழிலை மேற்கொண்டு வருகிறார். இந்த நிலையில், ஆலடி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் அவரிடம் சீட்டு கட்டி வருகிறார்.

அந்த வகையில் ஆலடி பகுதியைச் சேர்ந்த குறித்த நபருக்கு சீட்டு விழுந்துள்ளது. இருப்பினும், அந்த காசு கொடுக்காத காரணத்தால் சீட்டு பிடிக்கும் பெண்ணின் கணவரை கடத்திச் சென்ற குழுவானது அவர் மீது கொடூர தாக்குதலை நடத்திவிட்டு திரும்பி வந்தது.

இதன்போது, வீதி கடமையில் இருந்த சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் தெரிந்த நிலையில் குறித்த தாக்குதலை நடத்தியவர்களை கைது செய்தனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, தாக்குதலுக்கு உள்ளான நபர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (எ- 05)

### விரிவுரையாளர் கொலை:
## சந்தேகநபர்களுக்கு மே 14 வரை மறியல்

யாழ்ப்பாணம், மே 02

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட சித்தமருத்துவத் துறை விரிவுரையாளர் தயாளினி திலீபன் கொலை வழக்கில் கைதான இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் மே மாதம் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது,

விசாரணையை எதிர்வரும் மே 20ஆம் திகதி நடத்த தீர்மானித்துள்ள நீதிவான், சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் மே மாதம் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# அதிக கட்டணம் அறவிட்ட தனியார் பஸ் நடத்துநருக்கு தண்டப்பணம்

யாழ்ப்பாணம், மே 02

முல்லைத்தீவு - வவுனியா மார்க்கத்தில் பயணிக்கும் தனியார் பஸ்களில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் அறவிடப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து, குறித்த பஸ் நடத்துநருக்கு உடனடியாகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ. விமலேஸ்வரன் தெரிவித்தார்.

குறித்த மார்க்கத்தில் பயணிக்கும் சில தனியார் பஸ்கள், பொது மக்களிடமிருந்து பெறப்படும் பணத்துக்கு பற்றுச்சீட்டுகளை வழங்குவதில்லை எனவும், மீதிப் பணம் உரிய முறையில் பயணிகளுக்குத் திருப்பியளிக்கப்படுவதில்லை எனவும் அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக நெடுங்கேணி - வவுனியா பயணத்துக்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட கூடுதலான கட்டணம் அறவிடப்படுவதாக ஆதாரத்துடன் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடு கிடைக்கப்பெற்றதையடுத்து, அதிகார சபையால் உடனடியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, சம்பந்தப்பட்ட பஸ் நடத்துநர் விசாரிக்கப்பட்டதில் அவர் அதிக கட்டணம் அறவிட்ட குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார். இதற்கமைவாக அவருக்கு உடனடியாகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் புதிதாக நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களுக்கு அமைவாகவே பணத்தைப் பெற்று அதற்கான பற்றுச்சீட்டை வழங்க வேண்டும். இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விடக் கூடுதலான கட்டணம் அறவிடுபவர்களுக்கு எதிராகவும், பயணிகளுக்குப் பற்றுச்சீட்டு வழங்காதவர்களுக்கு எதிராகவும் இனிவரும் காலங்களில் மிகவும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அதிகார சபைத் தலைவர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோயால் வருடாந்தம் 1400 பெண்கள் பாதிப்பு

## 800 மரணங்கள் பதிவு

கொழும்பு, மே 02

நாட்டில் வருடாந்தம் சுமார் 1,400 பெண்கள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்படுவதாகவும், சுமார் 800 மரணங்கள் பதிவாவதாகவும் குடும்ப சுகாதார பணியகத்தின் விசேட மருத்துவ நிபுணர் நதீஜா ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தவும், 2030 ஆம் ஆண்டளவில் இலங்கையிலிருந்து கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை ஒழிக்கவும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையில் 15 வயதுக்கு மேற்பட்ட சுமார் 8 மில்லியன் பெண்கள் வாய்ப் புற்றுநோய் பாதிப்புக்குள்ளாகும் அபாயத்தில் உள்ளனர்.

இதற்கு முக்கிய காரணம் ஹியூமன் பாப்பிலோமா வைரஸ் ஆகும். இது உடலுறவு மூலம் பரவுகிறது.

உற்பத்தித்திறன் மிக்க வயதில் இருக்கும் பெண்கள் இதனால் பாதிக்கப்படுவதால், அது நாட்டின் பொருளாதாரத்திலும் குடும்பங்களின் வாழ்வாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

1996 இல் ஆரம்பிக்கப்பட்ட "சுவநாரி" திட்டத்தின் கீழ் 1998 ஆம் ஆண்டு முதல் புற்றுநோயை கண்டறியும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன"- என்றார்.

2030 ஆம் ஆண்டளவில் உலகளாவிய இலக்குகளை அடைய பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

70 சதவீத பெண்களுக்கு 35 மற்றும் 45 வயதில் துல்லியமான பரிசோதனைகளை மேற்கொள்ளுதல்.

எச். பி. வி. -டி. என். ஏ பரிசோதனையை நாடு முழுவதும் விரிவுபடுத்துதல்.

நடமாடும் கிளினிக்குகள் மூலம் பரிசோதனைகளை அதிகரித்தல்.

"அக்ரஹார" போன்ற காப்புறுதித் திட்டங்களின் ஊடாக இதற்கான ஆதரவைப் பெற்றுக்கொள்ளுதல்.

முன்கூட்டியே கண்டறிவதன் மூலம் முழுமையாகக் குணப்படுத்தக்கூடிய மற்றும் தடுக்கக்கூடிய இந்த நோயிலிருந்து பெண்களைப் பாதுகாக்க பரிசோதனைகளில் கலந்துகொள்ளுமாறு சுகாதார பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (எ)

# ஹர்ஷன சூரியபெருமவுக்கு இரட்டை குடியுரிமையா?

## சபாநாயகரிடம் முறைப்பாடளிக்க சிறீலங்கா பொதுஜன பெரமுன முடிவு

கொழும்பு, மே 02

திறைசேரியின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும இரட்டை குடியுரிமையை கொண்டவர். பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்பதற்கு முன்னர் இரட்டை குடியுரிமையை இரத்துச் செய்திருந்தால் அதற்கான ஆவணங்களை அவர் பகிரங்கப்படுத்த வேண்டும். இந்த விடயம் குறித்து சபாநாயகரிடம் முறைப்பாடளிக்கவுள்ளோம் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமன்ன தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"திறைசேரியால் அவுஸ்திரேலிய நிறுவனத்துக்குச் செலுத்தப்பட்ட 2. 5 மில்லியன் டொலர் 3 ஆம் தரப்பினரால் மோசடி செய்யப்படவில்லை. அது திட்டமிடப்பட்ட ஒரு கூட்டு மோசடி என்ற நியாயமான சந்தேகம் எமக்கு காணப்படுகிறது.

மோசடி தொடர்பில் திறைசேரியோ அல்லது அரசாங்கமோ வெளிப்படையாக செயல்படவில்லை. நாட்டின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள நிலையில் இந்த விடயம் குறித்து இதுவரையில் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படவில்லை"- என்றார்.

# பிற்பகலில் இடியுடன் கூடிய கடும் மழை பெய்யும்!

கொழும்பு, மே 02

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களின் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிக ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என்று அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேல் மற்றும் தெற்கு மாகாணங்களின் கடலோரப் பகுதிகளில் காலை வேளையிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது. (எ)

# இலங்கை ரூபாயின் பெறுமதி 2. 9 சதவீதத்தால் வீழ்ச்சி!

கொழும்பு, மே 02

2026 ஏப்ரல் மாத இறுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 2. 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி இறுதியில் மத்திய கிழக்கில் ஏற்பட்ட மோதல் சூழலை தொடர்ந்து, வெளிநாட்டுத் துறையில் ஏற்பட்ட அழுத்தங்கள் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைவதற்கு முக்கிய காரணமாக அமைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2026 மார்ச் மாத இறுதியில், சீனாவின் மக்கள் வங்கியுடனான பரிமாற்ற வசதி உட்பட, இலங்கையின் மொத்த உத்தியோக பூர்வ கையிருப்பு 7.0 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது.

சந்தையில் இருந்து வெளிநாட்டு நாணயங்களை கொள்வனவு செய்த போதிலும், அந்த மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு கடன் சேவை கொடுப்பனவுகள் காரணமாக மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு வீழ்ச்சியடைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (எ)

# இலங்கைக்கு கடத்தவிருந்த பல பொருட்கள் கைப்பற்றல்

## உரிமையாளர் தலைமறைவு

சென்னை, மே 02

தமிழகத்தில் புதுமடம் கடற்கரை ஊடாகப் படகு மூலம் இலங்கைக்குக் கடத்துவதற்காக வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த, சுமார் 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்ட கடற்கரை பகுதி இலங்கைக்கு மிக அருகில் அமைந்துள்ளதால், கடல் வழியாகப் பொருட்கள் கடத்தப்படுவது தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.


கடந்த ஒரு மாத காலமாகத் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்ததால் கடத்தல்கள் குறைந்திருந்த நிலையில், தற்போது விதிகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் கடத்தல் சம்பவங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

உச்சப்புளி அருகே உள்ள புதுமடம் மானாங்குடி வீதியில் உள்ள வீடு ஒன்றில் கடத்தல் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக இராமேஸ்வரம் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதனடிப்படையில், ஆள் நடமாட்டமில்லாத அந்த வீட்டைச் சுற்றிவளைத்து பொலிஸார் சோதனை நடத்தியபோது, அங்கு 28 மூடைகளில் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டன.

அந்த மூடைகளைச் சோதனையிட்டதில் 19 மூடைகளில் பூச்சிக்கொல்லி மருந்து, 5 மூடைகளில் அழகு சாதன க்ரீம், 2 மூடைகளில் சவர்க்காரம் போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

தலைமறைவாக உள்ள வீட்டின் உரிமையாளரை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2. 5 மில்லியன் டொலர் மோசடி விவகாரம்: சபை ஒத்திவைப்பு விவாதத்துக்கு அனுமதி

## சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவிப்பு

கண்டி, மே 02

திறைசேரியால் செலுத்தப்பட்ட 2. 5 மில்லியன் டொலர் மோசடி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்த எதிர்க்கட்சி முன்வைத்த வலியுறுத்தலுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கண்டி தலதா மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட வழிபாட்டின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கைது செய்யப்பட்ட விவகாரம் குறித்து பொலிஸ்மா அதிபர் எனக்கு அறிவுறுத்தினார். நாட்டின் பொதுச்சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுங்கள் என்று குறிப்பிட்டேன்.

பாராளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களுக்கு ஒரு முன்மாதிரியாக செயல்பட வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் என்பதால் நாட்டின் சட்டத்துக்கு அப்பாற்பட்ட வகையில் செயல்பட முடியாது. சட்டத்துக்கு கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டும்.

திறைசேரியால் செலுத்தப்பட்ட 2. 5 மில்லியன் டொலர் நிதி மோசடி செய்யப்பட்ட விவகாரம் குறித்து எதிர்க்கட்சியினர் கோரிய விவாதத்துக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரம் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதால் மூன்றாம் வாரத்தில் நடைபெறவுள்ள பாராளுமன்ற அமர்வுகளில் அதற்குரிய திகதி பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் ஒதுக்கப்படும்"- என்றார். (எ)

# ஒரு கிலோ கீரி சம்பா அரிசி 400 ரூபாய்க்கு விற்பனை

## வர்த்தகருக்கு 100,000 அபராதம்

அக்கரைப்பற்று, மே 02

கீரி சம்பா அரிசியை நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றத்துக்காக, அக்கரைப்பற்று பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு 100,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் படி, ஒரு கிலோ கிராம் கீரி சம்பா அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 260 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த வர்த்தக நிலையம் 2 கிலோ கிராம் அரிசியை 800 ரூபாய்க்கு, அதாவது ஒரு கிலோ கிராமை 400 ரூபாய் வீதம் விற்பனை செய்தமை கண்டறியப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் அம்பாறை மாவட்ட அலுவலக அதிகாரிகளால் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், நீதிமன்றத்தில் விடயங்கள் அறிக்கை செய்யப்பட்டதையடுத்து, குற்றத்தை ஒப்புக்கொண்ட வர்த்தக நிலைய உரிமையாளருக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (எ)

### நன்னடத்தை நிலையம் ஒன்றில்

# சிறுவர்கள் மீது தாக்குதல்: ஐந்து ஊழியர்கள் மறியலில்

கொழும்பு, மே 02

வெலிமடை பகுதியில் அமைந்துள்ள சிறுவர் நன்னடத்தை நிலையம் ஒன்றில் தங்கியிருந்த சிறுவர்கள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குறித்த சந்தேகநபர்கள் வெலிமடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

119 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்திருந்தனர்.

நன்னடத்தை நிலையத்தின் ஊழியர்கள் அங்கிருந்த சிறுவர்களை இரும்புக்கம்பிகள் மற்றும் தடிகளால் தாக்கியதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த நிலையத்தில் தங்கியிருந்த 12 முதல் 18 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களே இந்தத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெலிமடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# டித்வா புயலால் வீடுகளை இழந்தவர்களுக்கு காணிகளை வழங்க கம்பனிகள் இணக்கம்

## பிரதி அமைச்சர் பிரதீப் தகவல்

கொழும்பு, மே 02

டித்வா புயலால் வீடுகளை இழந்த மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு கம்பனிகளிடமிருந்து 10 பேர்ச் காணியை பெற்று, வீடமைத்து கொடுப்பதற்கு கடந்த அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டுள்ளது என்று பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"வெளியில் விமர்சிக்கப்படுவதைப் போன்று பெருந்தோட்ட மக்களின் காணி உரிமை நிறுவனங்களிடம் வழங்கப்படவில்லை. தொழிலாளர்கள் தோட்டப் பகுதிகளில் வசிக்க விரும்பாவிட்டால் 50 இலட்சம் ரூபாவைப் பெற்று தமக்கு விருப்பமான இடங்களில் குடியிருப்புகளை அமைத்துக் கொள்ள முடியும்.

மாறாக தோட்டப்பகுதிகளுக்குள்ளேயே வீடுகளை அமைத்துக் கொள்பவர்களின் இருப்புக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாது. காரணம் வீடுகள் அமைக்கப்பட்டவுடன் அவற்றில் குடியேறும் மக்களுக்கு காணி உரித்து வழங்கப்படும். எனவே, அவர்கள் பெருந்தோட்டப்பகுதிகளில் தொழில் செய்யாவிட்டாலும், எவராலும் பலவந்தமாக அவர்களை அந்த வீடுகளிலிருந்து வெளியேற்ற முடியாது."- என்றும் அவர் கூறினார். (எ)

# போதைப்பொருட்களுடன் இளைஞன் ஒருவர் கைது!

கொழும்பு, மே 02

மாதம்பிட்டிய பொலிஸ் பிரிவின் ரன்முத்து செவன பகுதியில் பாரியளவிலான ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வாலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 33 கிராம் 210 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 17 கிராம் 570 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் மூலம் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 135,500 ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மாதம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பலி!

அம்பாறை, மே 02

மகாஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொரபொல பகுதியில் மின்னல் தாக்கியதில் நேற்று முன்தினம் மாலை நபர் ஒருவர் உயிரிழந்தார்.

வயல் நிலத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஒருவரே இவ்வாறு மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் பொரபொல, மகாஓயா பகுதியைச் சேர்ந்த 60 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மகாஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கறுப்பு ஆடைகள் அணிந்து விழிப்புணர்வு போராட்டம்



திருகோணமலை, மே 02

திருகோணமலை - பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்துநகர் விவசாயிகள் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை கறுப்பு ஆடை அணிந்து, பதாகைகளை ஏந்திய வாறு விழிப்புணர்வு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் திருகோணமலை- கண்டி பிரதான வீதியின் முத்து நகர் சந்தியில் நடைபெற்றது.

கடந்த பல வருடங்களாக தமது வயல்காணிகளுக்கான தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரியே இந்த விழிப்புணர்வு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாய காணிகளை சூறையாடி தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின்சார உற்பத்திக்காக வழங்கப்பட்டதை கண்டித்து தொழிலாளர் தினத்தை கரிநாளாக மாற்றி போராடினார்கள்.

எமது நிலம் எமக்கு வேண்டும், விவசாயிகளுக்கு நீதி வேண்டும், நலிவடைந்த உழவருக்கு ஐ. எம். எவ். நீதி பெற்றுத்தா?, முத்து நகர் விவசாய காணிகளை மீள தா? போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கமத் தொழிலாளர்களின் விவசாய நிலங்களைப் பெற்றுத் தருமாறு கோரி சுமார் 50 பேருக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பில் 672 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, மே 02

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் வியாழக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 672 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 36,083 பேர் பரிசோதிக்கப்பட்டதுடன், 11 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 303 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 235 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 110 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 77 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,691 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சதிகார குழுக்களுக்கு...

பெருந்தோட்டத் தொழில் துறை பாரியளவில் பாதிக்கப்பட்டது. உழைக்கும் மக்களின் வீடுகள் பலவும் சேதமடைந்தன.

எனினும், உழைக்கும் மக்களின் நலனை முன்னிறுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகளவிலான இழப்பீட்டுத் தொகையை வழங்க இந்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த அரசாங்கத்தைப் பாதுகாப்பது இந்நாட்டு மக்களே. மக்களின் பலமான நம்பிக்கையினாலேயே அரசாங்கம் இன்றும் ஸ்திரமாக உள்ளது.

அரசாங்கத்தை வீட்டுக்குச் செல்லுமாறு 10 முதல் 15 பேர் அடங்கிய சிறிய குழுக்கள் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றனர். மக்கள் விசுவாசத்தை வென்ற ஓர் அரசாங்கத்தை இவ்வாறான சிறிய குழுக்களின் கூச்சல்களால் வீழ்த்திவிட முடியாது. அரசாங்கம் மக்களின் நம்பிக்கையுடன் பலமாக இருப்பதோடு, மக்களின் நலனுக்காகவே தொடர்ந்தும் செயற்படும்.

அரசாங்கத்தை விரட்ட எண்ணும் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்தாலும் கூட அரைப்பங்கு மக்களையேனும் அவர்களால் திரட்ட முடியாது-என்றார். (அ)

## பாரிய ஊழல்களில்...

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நிலக்கரி மோசடி மற்றும் மத்திய திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் திருடப்பட்டமை ஆகியவை அண்மைய காலத்தின் பாரிய ஊழல்களாகும்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் அரசாங்கம் நிறைவேற்றவில்லை.

வாழ்க்கைச் செலவு விண்ணைத் தொட்டுள்ள நிலையில் ஆளும் தரப்பினர் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர்.

பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினர் குரல் எழுப்ப இடமளிக்கப்படாமல் அச்சுறுத்தல்கள் மூலம் ஆட்சி நடத்தப்படுகிறது.

தோல்வி பயத்தினால் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படுவதில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் இம்முறை மே தினத்திற்காகத் தெரிவு செய்துள்ள உருட்டு, பிரட்டு, திருட்டு என்ற வாசகம் தற்போதைய சூழலுக்கு மிகவும் பொருத்தமானது.

இந்த வாசகத்தை உள்ளூராட்சி சபைகள் ஊடாக அடிமட்ட மக்கள் வரை கொண்டு செல்ல வேண்டும்..

பௌத்த உரிமைகள் மீறப்படுவதாகவும், கத்தோலிக்க திருச்சபைக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான நீண்ட கால மரபுகள் மீறப்படுகின்றமையும் கவலையளிக்கிறது.

1977 ஆம் ஆண்டு முதல் ஜே.ஆர். ஜெயவர்தன மற்றும் ரணசிங்க பிரேமதாச ஆகியோரால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் தற்போது முடங்கியுள்ளன.- என்றார். (அ)

## விசேட விசாரணை...

முறைப்பாடுகள் குறித்து முறையான விசாரணைகளை முன்னெடுக்கவும் ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்த விசேட குழு அண்மையில் உருவாக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டச் செயற்பாடுகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்குத் தொடர்ச்சியாகப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இம்முறைப்பாடுகளின் உண்மைத்தன்மையை ஆராய்வதற்கும், பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை நேரடியாகக் கண்காணிப்பதற்கும் ஆளுநர் குறித்த விசேட குழுவிற்குப் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதற்கமைவாக, இக்குழுவினர் நேற்று முன் தினம் காலை வவுனியா மற்றும் கிளிநொச்சியில் தலா 06 பாட சாலைகள்; மன்னார் மற்றும் முல்லைத்தீவில் தலா 07 பாடசாலைகள் மற்றும் யாழ்ப்பாணத்தில் 08 பாடசாலைகள் என வடக்கு மாகாணம் முழுவதும் 34 பாடசாலைகளில் ஒரே நேரத்தில் களமிறங்கினர். இதன்போது, உணவு வழங்கல் செயற்பாடுகள், உணவு தயாரிக்கப்படும் முறை, அங்கு பேணப்படும் சுகாதாரத் தரநிலைகள் மற்றும் அது தொடர்பான உரிய ஆவணப் பேணுகைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆழமான கள ஆய்வுகளை மேற்கொண்டனர்.

ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக, இந்தக் கள ஆய்வுகளில் கண்டறியப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய விசேட அவதானிப்பு அறிக்கையை இக்குழுவினர் ஆளுநரிடம் சமர்ப்பிக்கவுள்ளனர். (அ)

## மரத்திலிருந்து...

இராச துரை பகவான்தாஸ் (வயது 64) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கறிவேப்பிலை பறிப்பதற்கு சென்று மரத்தில் ஏறியபோது தவறி கீழே விழுந்து மயக்கமுற்றுள்ளார். இதன்போது வீதியால் சென்றவர்கள் அவரது மனைவிக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பின்னர் அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-05)

# அரச நிறுவனங்களின் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

## புதிய சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு, மே. 03

அரசாங்க நிறுவனங்களில் தற்காலிக, சாதாரண (நாட் சம்பளம்), மாற்று, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் தற்போது பணியாற்றி வரும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான சுற்றறிக்கையை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

பொதுத்துறை ஊழியர்களின் நீண்டகால வேலைவாய்ப்பு ஸ்திரத்தன்மை மற்றும் அவர்களின் நிலை குறித்த கவலைகளுக்கு இந்த நடவடிக்கை தீர்வு காணும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தகுதி வாய்ந்த ஊழியர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்துவதையும், பொதுத்துறையில் அதிக வேலை பாதுகாப்பை உறுதி செய்வதையும் இந்த சுற்றறிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பல்வேறு அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் சட்டப்பூர்வ அமைப்புகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இந்த சுற்றறிக்கை பொருந்தும்.

சேவைக் காலம், செயற்திறன் மதிப்பீடுகள் மற்றும் அந்தந்த நிறுவனங்களில் காணப்படும் வெற்றிடங்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட அளவுகோல்களின் அடிப்படையில் இந்த நடைமுறை மேற்கொள்ளப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தகுதிவாய்ந்த பணியாளர்களைக் கண்டறிந்து, நிரந்தர நியமனங்களை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு இந்த சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## மாகாண சபை...

நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே சஜித் இவ்வாறு கூறினார்.

“ஐக்கிய மக்கள் சக்தி பலவீனமான எதிரணி எனக் கூறுவதற்கு சிலர் முற்படுகின்றனர்.

ஆனால் பலம்பொருந்திய அரசாங்கத்தின் சபாநாயகரை வீட்டுக்கு அனுப்பினோம். எரிசக்தி அமைச்சரை வீட்டுக்கு அனுப்பினோம்.

எனவே, நாம் வலுவாகவே இருக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியும் எம்முடன் இணையும்.

இந்த நாளில் ஜனாதிபதிக்கு சவாலொன்றை விடுக்கின்றேன். அதாவது மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகின்றேன். அவ்வாறு நடத்தினால் எமது முதலமைச்சர்களின்கீழ்தான் அடுத்த மே தினம் நடத்தப்படும்.” - என்றார் சஜித். (அ)

## வடக்கு - கிழக்கு...

பட்டிப்பளையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், புதிய அரசியலமைப்பு கட்டமைப்பின் ஊடாக நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தமிழ் மக்கள் தமது பாரம்பரிய நிலப்பகுதிகளில் சுயமாக ஆளும் உரிமையைப் பெறுவதன் மூலமே விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடைத் துறைகளில் நிலவும் நீண்டகால வாழ்வாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்விசேட மே தின நிகழ்வுகளில் கட்சியின் உத்தியோகபூர்வப் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

அதில் பத்து முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன:

பொருளாதார நெருக்கடி, டிட்வா சூறாவளி மற்றும் மத்திய கிழக்கு மோதல்களால் வீழ்ச்சியடைந்துள்ள ரூபாயின் மதிப்பைக் கருத்திற்கொண்டு தினசரி ஊதியம் பெறுபவர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்.

உரம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

நிலக்கரி இறக்குமதியில் இடம்பெற்ற ஊழலினால் ஏற்பட்ட மேலதிக செலவுகளை நுகர்வோரிடமிருந்து வசூலிக்காமல், அதற்குப் பொறுப்பான அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து அறவிட வேண்டும்.

புதிய அரசாங்கத்திற்குள் இடம்பெறும் ஊழல்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு பொதுச் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நீண்டகாலமாகப் பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் இந்த ஆண்டுக்குள் நடத்தப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு விரைவான மற்றும் பயனுள்ள நீதி பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

இராணுவம், தொல்பொருள் திணைக்களம், வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையினால் வசப்படுத்தப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு நிலங்கள் மக்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும். (அ)

## ஜனநாயக தமிழ்...

இணுவில் பகுதியில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசிய கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய கட்சிகளை ஒன்றிணைத்தே இந்த மே தின கூட்டம் நடத்தப்பட்டது.

இதில் பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினரான ப.கஜதீபன், ஜனநாயகப் போராளிகள் கட்சியை சேர்ந்த வேந்தன், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

## தமிழ்த் தேசிய...

தேசியப் பேரவையின் சர்வதேச தொழிலாளர் தினக் கூட்டமும் பேரணியும் நேற்று யாழ்ப்பாணத்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

நேற்று பிற்பகல் 3:30 மணியளவில் நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில் முன்றலில் ஆரம்பமான இந்தப் பேரணி, பருத்தித்துறை வீதியூடாகச் சென்று நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தை வந்தடைந்தது.

பேரணியைத் தொடர்ந்து இளங்கலைஞர் மண்டபத்தில் விசேட மே தினக் கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியப் பேரவையின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மே தின உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியப் பேரவையின் அரசியல் பிரமுகர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் பெருமளவிலான பொதுமக்கள் கலந்துகொண்டனர். (அ)

## படை அதிகாரிகள்...

நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர் பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில், காணிகளை விடுவிக்குமாறு கடந்த வெள்ளிக்கிழமை முதல் பிரதி வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்தனர். அதற்கமைவாக நேற்று போராட்டத்தை முன்னடுத்திருந்தனர்.

போராட்ட இடத்திற்கு வருகைதந்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறித்த மக்களை ஜனாதிபதியுடன் சந்திக்க வைப்பதாகவும் இந்த போராட்டத்திற்கு தான் பூரண ஆதரவ வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார். (அ)

## கேப்பாபிலவு...

பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தொழில் துறைகள் முடக்கப்பட்டுள்ளதாகவும், கவலை வெளியிட்டனர்.

தொழிலாளர் தினமான நேற்று, தங்களின் பூர்வீக நிலங்களை விடுவித்து, தாயக மண்ணில் வாழ அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை, மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கேப்பாபிலவு மக்களுடைய 55 குடும்பங்களின் 59.5 ஏக்கர் மக்கள் குடியிருப்பு காணியும், இராணுவ வசம் உள்ள மிகுதிக் காணியும் என, 171 ஏக்கர் காணி விடுவிக்கப்படவில்லை என மக்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

## இலங்கையர்களின் உயிரியல் தரவுகளை இந்திய நிறுவனத்திடம் கையளிக்க முயற்சி!

### ஜன அரகலய இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 03

இலங்கையர்களின் கைரேகை மற்றும் கண் விழித்திரை உள்ளிட்ட மிக முக்கியமான உயிரியளவியல் தரவுகளை, கறுப்புப் பட்டியலில் உள்ள இந்திய நிறுவனமொன்றிடம் கையளிக்க அரசாங்கம் முயற்சிப்பதாக ஜன அரகலய இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அந்த இயக்கத்தின் தேசிய செயற்பாட்டுக் குழு உறுப்பினர் வசந்த முதலிகே இந்த தகவலை வெளியிட்டார்.

இலங்கையின் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய இத்தகைய உணர்திறன் மிக்க தரவுகளை இந்தியாவிடம் கையளிப்பதன் மூலம், நாட்டை ஒரு கைப்பாவையாக மாற்ற அரசாங்கம் முயற்சிப்பதாக அவர் சாடினார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலத்திரனியல் அடையாள அட்டைத் திட்டத்திற்காக ஏற்கனவே 5.6 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ள நிலையில், தற்போது இந்தத் திட்டத்தின் முழுமையான அதிகாரத்தை இந்தியாவிடம் ஒப்படைக்க உடன்படிக்கைகள் எட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## அத்தியாவசிய மருந்துகள் நாட்டில் பாரிய தட்டுப்பாடு!

### மருத்துவ தொழிற்சங்கம் தகவல்



கொழும்பு, மே. 03

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மருந்து விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் காரணமாக, அத்தியாவசிய மருந்துகளுக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக மருத்துவ தொழிற்சங்கப் பிரதிநிதியொருவர் எச்சரித்துள்ளார்.

இது குறித்து மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவிக்கையில்-

ரூபாவின் தொடர்ச்சியான வீழ்ச்சி மற்றும் பணவீக்கம் காரணமாக வெளிநாட்டு மருந்து விநியோகஸ்தர்களால் முறையான விநியோக முறையைப் பேண முடியவில்லை எனத் தெரிவித்தார்.

இந்த மருந்துத் தட்டுப்பாடு காரணமாக புற்றுநோய், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், அறுவை சிகிச்சைக்காகக் காத்திருப்பவர்கள் மற்றும் தொற்றா நோய்களுக்கான சிகிச்சைப் பெறுபவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சில மருந்துகளைப் பதிவு செய்வதில் தாமதம் ஏற்படுதல், அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் மருந்துகளை இறக்குமதி செய்ய விநியோகஸ்தர்கள் தயக்கம் காட்டுதல், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் கடுமையான மதிப்பு வீழ்ச்சி ஆகிய காரணங்களால் அத்தியாவசிய மருந்துகளுக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், குறைந்த வருமானம் பெறும் நோயாளிகள் அதிக கட்டணம் செலுத்தி வெளிநாடுகளிலிருந்து மருந்துகளை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

உரிய அதிகாரிகள் உடனடியாக இந்த நிலையைச் சரிசெய்யத் தவறினால், சுகாதார சேவைகள் மற்றும் நோயாளிகளின் பராமரிப்பு நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்படலாம் என மருத்துவர் சமல் சஞ்சீவ எச்சரித்துள்ளார். (அ)

## சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த புதிய விதிகள்!

கொழும்பு, மே. 03

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளில் இரண்டாவது அதிகபட்சமாக உடல் ரீதியான தண்டனைகள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

ஆண்டு தோறும் 2,000 முதல் 2,500 வரையிலான உடல் தண்டனை சம்பவங்கள் பதிவாகின்றன.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு அதிகரித்து வந்த போதிலும், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில் உடல் தண்டனையானது ஒழுக்கத்தை நிலைநாட்டும் முறையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த உடல் மற்றும் உளவியல் ரீதியான தண்டனைகள் குழந்தையின் ஆளுமை வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் நீண்டகால மற்றும் குறுகியகால பாதிப்புகளை ஏற்படுத்துவதாக நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் 11 ஆவது பிரிவு, சித்திரவதை மற்றும் கொடுமையான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான சிகிச்சைக்கு எதிராகப் பாதுகாப்பை வழங்குகிறது.

தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 308(ஏ) மற்றும் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் (12/2016 மற்றும் 11/2026) கல்விச் சூழலில் சிறுவர்களுக்கு எதிரான உடல் அல்லது மனரீதியான வன்முறைகளைத் தடை செய்கின்றன.

2024 பொகோடா மாநாட்டில் உறுதியளித்தபடி, நேர்மறையான ஒழுக்க முறைகளை மேம்படுத்தவும், வன்முறையற்ற சூழலை உறுதிப்படுத்தவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஏப்ரல் 30 ஆம் திகதி அனுசரிக்கப்படும் உடல் தண்டனையை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு, சிறுவர்களின் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் உறுதி செய்யும் வகையில் உடல் தண்டனைகளை முற்றாகக் கைவிட்டு, நேர்மறையான ஒழுங்குமுறை அணுகுமுறைகளைப் பின்பற்றுமாறு பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (அ)

## சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு புதிதாக இணையவழிப் பதிவு முறை

கொழும்பு, மே. 03

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் உள்ள பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு குறித்த சமீபத்திய விடயங்களைக் கருத்தில் கொண்டு, சட்ட மற்றும் கொள்கை ரீதியான ஏற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தி கடுமையாக அமுல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகத்துடன் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். மாகாண சபைகளின் கீழ் உள்ள மாகாண முன்பள்ளி பிரிவுகள், முன்பள்ளிகள் உள்ளிட்ட முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களைப் பதிவு செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் பொறுப்பாக உள்ளன.

சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மாகாண நன்னடத்தை திணைக்களங்களில் பதிவு செய்யப்படுவதுடன், அவை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

இவ்வாறான நிலையங்களை இயக்குவதற்குப் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்ட போதிலும், சில நிலையங்கள் உரிய பதிவின்றி ஏனைய கல்வி நிறுவனங்கள் மற்றும் வணிகங்களுடன் இணைந்து இயங்குவதால் ஒழுங்குமுறை செயல்முறை சிக்கலாகியுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

முன்பள்ளிகள் மற்றும் பராமரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் தற்போதுள்ள மற்றும் முன்மொழியப்பட்ட தர நிலைகள் உரிமையாளர்கள், பராமரிப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு அறிவிக்கப்படும்.

இச்செயற்பாடுகளை முறைப்படுத்துவதற்காக வினைத்திறன் மிக்க இணையவழிப் பதிவு முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

## 2.5 மில்லியன் டொலர்கள் மாயம் மே 5 சபையில் விசேட அறிக்கை!

கொழும்பு, மே. 03

காணாமல் போனதாகக் கூறப்படும் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விவகாரம் தொடர்பாக, நிதியமைச்சு எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளது.

இந்த விசேட அறிக்கையை நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த பண விவகாரம் தொடர்பில் நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரிடமும் அரசாங்க நிதி பற்றிய குழுவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ)

## திறைசேரி நிதி காணாமற்போனமை; நிதி அமைச்சுக்கு ஒரு மாத அவகாசம்

கொழும்பு, மே. 03

திறைசேரியினால் அவுஸ்திரேலிய கடன் வழங்குநருக்கு அனுப்பப்பட்ட 2.5மில்லியன் டொலர்கள் காணாமல்போனமை தொடர்பில், நிதியமைச்சுக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஆதாரங்களுடன் கூடிய முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக இந்த ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த நிதி மீட்கப்படாவிட்டால், அதன் சுமை இறுதியில் வரி செலுத்துவோர் மீது விழக்கூடும் என்று பொது நிதி மீதான குழுவின் தலைவரும், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அவுஸ்திரேலியாவில் உள்ள ஒரு சம்பந்தப்பட்ட தரப்பினருக்குச் செலுத்தப்பட வேண்டிய 10 அரச கடன் திருப்பிச் செலுத்தும் பரிவர்த்தனைகள் உரிய பெறுநரைச் சென்றடையவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், நிதியமைச்சின் அதிகாரிகள் குழு, நேற்று முன் தினம் பாராளுமன்ற பொது நிதி மீதான குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதில், திறைச் செயலாளர் ஹர்ஷனா சூரியப்பெரும மற்றும் சிரேஷ்ட நிதி அமைச்சக அதிகாரிகள், சிரேஷ்ட மத்திய வங்கி அதிகாரிகள் முன்னிலையாகினர்.

இதன்போது, ஜனவரி மாதத்திலேயே அபாய அறிகுறிகள் தோன்றியதாகவும், ஆனால் மார்ச் மாதத்தில்தான் அவுஸ்திரேலியாவில் உள்ள சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எந்தப் பணமும் சென்றடையவில்லை என்பதை அதிகாரிகள் நேரடியாக உறுதிப்படுத்தியதாக ஹர்ச டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இந்த விடயத்தை பாராளுமன்றத்திற்கும் குழுவுக்கு ஏன் முன்னதாகத் தெரிவிக்கப்படவில்லை என்பது உட்பட, செயல்முறைகளில் கடுமையான குறைபாடுகளைக் குழு கண்டறிந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் 2025, நவம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட அந்த 10 பரிவர்த்தனைகளின் மொத்த மதிப்பு 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிதி அமைச்சகத்தால் உள் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், அதே நேரத்தில் குற்றப் புலனாய்வுத்துறையினர் மற்றும் நீதிமன்றங்கள் பொறுப்பானவர்களைத் தீர்மானிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org